உ
சிவமயம்



உடுவில் தெற்கு பாலாவோடை
மானிப்பாயைச் சேர்ந்த

# அமரர் காசிப்பிள்ளை மகேஸ்வரி

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் காசிப்பிள்ளை மகேஸ்வரி

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
தலைவியாக இருந்து தன்னையே
உருக்கி ஒளியூட்டிய எங்கள்
ஆருயிர் தெய்வத்தின் நினைவுகளுடன்
எமது குல தெய்வத்தின் பாதங்களில்
இம்மலரை காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"



தோற்றம்
**10.04.1937**

மறைவு
**03.11.2004**

## அமரர்

## திருமதி காசிப்பிள்ளை மகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி காசிப்பிள்ளை மகேஸ்வரி
## அவர்களின் வாழ்க்கை வரலாறு.

ஈழத்திருநாட்டில் வடபால் அமைந்துள்ள எழில்மிகு உடுவில் பகுதியிலே அமைந்துள்ள பாலாவோடை, உடுவில் தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா சின்னம்மா தம்பதிகளின் இல்லறத்தின் பயனாக அமரர் மகேஸ்வரி அவர்கள் அவதரித்தார். இவர் தனது கல்வியை இணுவில் மகாவித்தியாலயத்தில் கற்றார் இவர் திருமணப் பருவம் எய்தியவுடன் பெற்றோர்கள் கொழும்பில் தொழில்புரியும் காசிப்பிள்ளையை திருமணம் செய்து வைத்தார்கள் காசிப்பிள்ளை என்பவர் இராமலிங்கம் ஆச்சிமுத்து தம்பதியினரின் மகனாவார். காசிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் இல்லற வாழ்வின் பயனாக சாந்தினி, சிவராசா, சரோஜினி என்ற மூன்று பிள்ளைகள் பெற்று வளர்ந்தனர் இவர்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வரும் நாளில் தனது அன்புக் கணவராகிய காசிப்பிள்ளை இறைவனடி சேர்ந்து விட்டார். தாங்கமுடியாத இந்தத் துயருடன் பிள்ளைகளுக்கு தாய்க்குத் தாயாகவும் தந்தையாகவும் நல்ல அறிவூட்டி நல்ல வழிப்படுத்தி பிள்ளைகளை வளர்த்து வந்தார். பிள்ளைகள் வளர்ந்து மணப்பருவம் அடைந்ததும் மூத்த மகளாகிய சாந்தினிக்கு கோண்டாவிலைச் சேர்ந்த அப்பையா அன்னலக்சுமி தம்பதியினரின் மகனாகிய பரமேஸ்வரன் என்பவரை மணம்முடித்து வைத்தார்கள் இவர்களின் இல்லறத்தின் பயனாக தமிழினி, சுசாகரன், யோககீசன், பாமினி ஆகிய நான்கு பிள்ளைகளையும் பெற்றெடுத்தனர். பரமேஸ்வரன் புத்தளத்தில் விநாயகர் ஸ்ரோர்ஸ் என்னும் பெயரில் தொழில் புரிந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தின்
இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டு வதேயிந்த மாநிலத்தே

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம மற்புதக் கூந்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நமாமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்குந் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் புலம்பல்

அன்பின் வடிவமாய் பாசத்தின் உறைவிடமாய் ஊரார் போற்றும் உத்தமியாய் வாழ்ந்த எம் தாயே எங்கே சென்றீர்கள் வாழும் வயதினிலே கணவரை இழந்து எங்களுக்காய் உங்களது உதிரத்தையே ஊனாக ஊட்டிய எம் தாயாரே எம்மை விட்டு எங்கே மறைந்தீர்கள். தந்தையின் சோகம் தெரியாமல் சிறுதுளியும் எம்மை நோகவிடாது உங்கள் உடலை உருக்கி வளர்த்தீர்கள். உங்களைப் பிரிந்து நாம் படம் வேதனைகள் பல ஆண்டு சென்றாலும் எம் துயரம் தீராதம்மா. எம் வாழ்வுள்ள நாள் வரைக்கும் நாம் மறவோம் உம்மை.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பாசத்தின் ஒளிவிளக்காய் பண்பின் உறைவிடமாய் எமக்கெல்லாம் அறிவூட்டி சீராட்டி தாலாட்டி பாடசாலை அழைத்துச் சென்று நற் பழக்கங்கள் சொல்லி நல்லவழிப்படுத்திய எம் ஆருயிர் அம்மம்மாவே எங்களுடன் ஓருயிராய் இருந்துவிட்டு இடைவழியில் எம்மைத் தனித்திருக்கவிட்டுவிட்டு நீ மட்டும் தனிவழியே போனதேனோ? நீங்கள் எங்களை விட்டுப் போனாலும் உங்கள் நினைவுகள் எங்களுடன் நிலைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஔவையார் அருளிச் செய்த
## விநாயகரகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியம்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னிற்
திருவடி வைத்துக் திறமிது பொருளென.
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியிற்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கு முபாயம்
கருவிகள் ஒடுங்கக் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்து
கடையிற் சுழுமுனைக் ககபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமுங்
குமத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங்காட்டி
அணுவுக் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

ஔவையார் அருளியச் செய்த
விநாயகர் அகவல் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலா அருள்
கந்தர் சஷ்டி கவசந் தனை

அமரரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக! வருக! மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம் படைத்த ஐயா வருக
நீறு இடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக!
ரவன பவச! ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொழி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்(து) அழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்து அணி மார்பும்
செப்ப முகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணை முழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செகண செககண செகண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திருவடியை உறுதியென்று எண்ணும்
என் தலை வைத் துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத்து இருபல் முனைவேல் காக்க!
செப்பியநாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்ன வடிவேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழு பதினாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிறிறடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேள் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பா நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரைஇருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க!
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஸ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடைமுனியும்
கொள்ளிவால்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட!
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள் முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டியுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயிர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை யங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகின் வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்து இருக்கும்
எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மக்களுடன்
வாழ்க வாழ்க வாரணன் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனை
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழி பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் கைவேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத்துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொண்ட என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியெ போற்றி
கறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேதா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

முற்றும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


எமது குடும்ப விளக்கின் உயிர்
பிரிந்த வேளையில் உடன் வந்து
உதவி புரிந்தவர்களுக்கும்
இறுதிக்கிரியைகளில் பங்கு
கொண்டவர்களுக்கும் எமக்கு ஆறுதல்
கூறியவர்களுக்கும் அனுதாபச்
செய்திகள் அனுப்பியோருக்கும்
இறுதிக்கிரியைகள் சிறப்புற நடக்க
உதவிய உறவினர், நண்பர்கள் அயலவர்கள்
அனைவருக்கும் எமது உளமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறோம்

மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நனன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org